# <u>குளச்சல் நகராட்சி</u>

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் டிசம்பர் திங்கள் 31–ம் நாள் திங்கள்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெறுற்றது.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**<u>பொருள் எண் : 1</u>**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண். Pro.A5/680/2007 நாள் 26.09.2007–ல் திரு.பெல்லார்மென்,எம்.பி. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2007–2008–ன்கீழ் குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மரமடிப் பகுதியில் ரூ. 2.00 லட்சம் மதிப்பீட்டில் ஒய்வறை ஒன்று கட்டுவதற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் 18.12.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.P.தங்கமணி | 0.93% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 1,99,852.90) |
| 2. | திரு.டேவிட்ராஜ் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு (ரூ. 1,97,881.05) |

இதில் திரு.டேவிட்ராஜ் என்பவர் 0.06% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u> :** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.டேவிட்ராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.417.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**<u>பொருள் எண் : 2</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சர்வே எண். M2/41–ல் ஆக்கிரமிப்பு தொடர்பாக திரு.பீர்முகம்மது என்பவர் நகராட்சிக்கு எதிராக இரணியல் நீதிமன்றத்தில் வழக்கு எண்.59/2005–ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு நடைபெற்று கொண்டிருக்கும் போது மனுதார் ஆக்கிரமிப்பை அகற்றி விட்டு வழக்கை வாபஸ் வாங்கியுள்ளார். மேற்படி வழக்கு தொடர்பாக நகராட்சி சார்பில் நகராட்சி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி வாதாடிய வகையில் வழக்கு தொகை ரூ. 2000/– செலவு தொகை ரூ. 225/– ம் சேர்த்து ரூ. 2225/– வழங்க கேட்டுள்ளார். மேற்படி தொகை வழங்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.418.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**<u>பொருள் எண் : 3</u>**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு கீழ்கண்ட பொருட்கள் மாவட்ட வினியோகம் (ம) விற்பனை சங்கம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட ஆட்சியரகம், நாகர்கோவில் அவர்களது அலுவலகத்திலிருந்து வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவு ரூ.1.00 லட்சத்திற்கும், பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | மண்வெட்டி (வாள்) | 10 எண்ணம் |
| 2. | களை மண்வெட்டி (ஓடை தோண்ட பயன்படுத்துவது | 6 எண்ணம் |
| 3 | வாளியில் பயன்படுத்தும் பெரிய பிளாஸ்டிக் கூடை | 10 எண்ணம் |
| 4 | பிளீச்சிங் பவுடர் | 1000 கிலோ கிராம் |
| 5 | சுண்ணாம்பு தூள் | 2000 கிலோ கிராம் |
| 6 | கருப்பு பினாயில் | 300 லிட்டர் |

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.419.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் : 4**

குளச்சல் நகராட்சியை குப்பையற்ற நகரமாக மாற்றுவதற்கு ஏதுவாக வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரிப்பதற்கு வீல்பாறோ தள்ளுவண்டிகள் தேவைப்படுவதால் மாவட்ட வினியோகம் (ம) விற்பனை சங்கம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட ஆட்சியரகம், நாகர்கோவில் அவர்களது அலுவலகத்திலிருந்து 10 வீல்பாறோ தள்ளு வண்டிகள் வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவு ரூ.65,000/– க்கும், பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, (வினியோகம்) நாகர்கோவில் அவர்களுக்கு உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.420.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் : 5**

குளச்சல் நகராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் வெள்ளிப்பிள்ளையார் கோயில் தெருவிலுள்ள போர்வெல் எண். 1, போர்வெல் எண். 3, பாலத்தன்கரையில் உள்ள போர்வெல் எண். 7, போர்வெல் எண். 8 மற்றும் பர்னட்டிவிளை யிலுள்ள போர்வெல் எண். 10 ஆகிய போர்வெல்களில் உள்ள மோட்டார்கள் பழுதடைந்து இயங்காமல் உள்ளது. இதனால் நகரின் பல பகுதிகளில் குடிநீர் விநியோகம் பெருமளவு பாதிப்படைந்துள்ளது. எனவே குடிநீர் விநியோகத்தை சீர் செய்யும் பொருட்டு மேற்கண்ட போர்வெல்களில் உள்ள நீர்மூழ்கி மோட்டார்களை சரி செய்யவும், இதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 40,000/–க்கும், பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.421.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் : 6**

குளச்சல் நகராட்சியில் 9 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் உள்ளன. அவைகளில் குடிநீர் பம்பிங் செய்யும்போதும், குடிநீர் விநியோகம் செய்யும் போதும், குடிநீர் விநியோகம் செய்யும் பணியாளர்கள் அடிக்கடி மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியின் மேல் ஏறி நீரின் இருப்பு விபரம் குறித்து தெரிய வேண்டியுள்ளது. மேலும் இரவு நேரங்களிலும் பம்பிங் செய்யும் போதும் தொட்டி நிரம்பியுள்ளதா என்பதை கண்டறிய அடிக்கடி தொட்டியின் மேலே ஏற வேண்டியுள்ளது. இதனால் சில சமயங்களில் நீர்தேக்கத் தொட்டி நிரம்பி வழிந்திடவும், சில சமயங்களில் குறைவாகவும், நீர் வழங்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் குடிநீர் வீணாவதற்கும் வாய்ப்புள்ளது. தவிர தண்ணீர் குறைவாக இருப்பின் குடிநீர் ஏரியாவிற்கு குறைவாக செல்லும் வாய்ப்பும் உள்ளது. இவற்றை சரி செய்து குடிநீர் விநியோகத்தை சீர் செய்வதற்கு அனைத்து மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளிலும் LEVEL GAUGE பொருத்த வேண்டியுள்ளது மிகவும் அவசியமாகும். அப்போது தொட்டியினுள் உள்ள நீரின் இருப்பை உடனுக்குடன் அனைவரும் தெரிந்து கொள்ள வாய்ப்புள்ளது. ஆகவே அனைத்து மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளிலும் LEVEL GAUGE அமைப்பதற்கும் அதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.52,000/– க்கும், இப்பணியினை பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.422.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் டிசம்பர் திங்கள் 31—ம் நாள் திங்கள்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்றது.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் : 1**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் | பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு. B.K. ரமே;ஷ் | நகராட்சி பொறியாளர் | 12/2007 | 1767/— |
| 2 | திருமதி.சுதா | நகரமைப்பு ஆய்வாளர் | 11/2007 | 526/— |
| 3 | திரு. ஆர். ஆரியங்காவு | துப்புரவு ஆய்வாளர் | 9/2007<br>10/2007 | 970/—<br>900/— |
| 4. | திரு.எஸ்.ஜே. இராஜகுமார் | இளநிலை உதவியாளர் | 11/2007 | 545/— |
| 5 | திரு. வி. நடராஜா | அலுவலக உதவியாளர் | 11/2007 | 108/— |
| 6 | திருமதி. மீனாம்பாள் | மகப்பேறு ஆயா | 9/2007<br>10/2007 | 364—<br>364/— |

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்.423.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் : 2**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினமும் சேகரிக்கும் குப்பைகளை பாதுகாப்பாக கொட்டுவதற்கு நகராட்சிக்கு சொந்தமாக உரக்கிடங்கு அமைக்க காலியிடம் இல்லாததால் இடம் வாங்குவதற்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது அலுவலகத்திலிருந்து கடிதம் எண். G.O.D.No. 306 நாள் 22.12.2003—ல் ரூ. 4.50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்கண்ட திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் உரக்கிடங்கு அமைக்க இடங்கள் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதில் போதிய இடம் கிடைக்காமல் இருந்தது. தற்போது சிங்காரவேலன் காலனியில் சர்வே எண்.D2 /32—ல் பிளாட் எண். 24—ல் 2. 00 சென்ட்—ம், பிளாட் எண். 28—ல் 3. 00 சென்ட்—ம், பிளாட் எண். 29—ல் 3. 00 சென்ட்—ம், 30—ல் 3. 00 சென்ட்—ம், பிளாட் எண். 32—ல் 3. 00 சென்ட்—ம், பிளாட் எண். 33—ல் 3. 00 சென்ட்—ம் ஆக மொத்தம் 17 சென்ட் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தேர்வு செய்யப்பட்ட இடத்தின் உரிமையாளர்கள் அவ்விடத்தை நகராட்சிக்கு விலைக்கு கொடுத்திட பத்திர நகலுடன் நகராட்சிக்கு சம்மத கடிதம் கொடுத்துள்ளனர்.

தேர்வு செய்யப்பட்ட 6 பிளாட்டுகளின் மதிப்பு விவரங்களை சார்பதிவாளர் அலுவலகம், குளச்சல் அவர்களின் கடிதம் நாள் 06.12.2007—ன்படி D2 /32—ல் அடங்கிய பகுதிகளுக்கு சதுர அடிக்கு ரூ. 50/—ம், சதுர மீட்டருக்கு ரூ. 540/—ம் உள்ளது என தெரிவித்துள்ளனர்.

எனவே இந்நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு உரக்கிடங்கிற்கு தேவையாக மேற்கண்ட இடத்தை அரசு விலை விகிதத்தில் நகராட்சிகளின் நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்று தேர்வு செய்யப்பட்ட இடத்தை வாங்கிட மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.424.** நகரின் மேற்கு சாலையை ஒட்டியுள்ள உப்பளம் பகுதியில் உரக்கிடங்கு அமைப்பதற்கு (Compost Yard) அரசிடமிருந்து 10ஏக்கர் நிலம் கிடைத்திடும் வாய்ப்பு உள்ளதால், மேற்படி பகுதியில் உரக்கிடங்கு அமைத்திடவும், பொருளில் குறிப்பிட்டுள்ள நிலத்தினை, நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்று வாங்கி அதில் நவீன ஆடுமாடு அறுக்கும் மனை அமைத்திடவும், நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பிரேரணை அனுப்பிடவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண் : 3</u>

இந்நகராட்சியில் குடிநீர் பகிர்மான குழாய்களில் அடிக்கடி ஏற்படும் பழுதுகளை நகராட்சி பணியாளர்களை கொண்டு சரி செய்வதற்கு அடிக்கடி தேவைப்படும் 2" pipe, 1 " pipe மற்றும் ¾" pipe மற்றும் Specials ஆகியவைகளை வாங்குவதற்கும், அதற்கான செலவுத் தொகை ரூ. 15,000–க்கும், இச்செலவினம் பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும், மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.425.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண் : 4</u>

இந்நகராட்சிக்குட்பட்ட களிமார் பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யும் பகிர்மான குழாய், ஓடையின் ஓரமாக செல்வதினாலும், பி.வி.சி. பைப் என்பதால் அடிக்கடி உடைந்து குடிநீர் வீணாகிறது. இதனால் குடிநீர் விநியோகம் தடைபடுகிறது. எனவே மேற்படி பைப்பினை மாற்றி 90 மீட்டர் நீளத்திற்கு 2" G.I. பைப் அமைத்தால் குடிநீர் விநியோகம் சீராக நடைபெறும். எனவே 90 மீட்டர் நீளத்திற்கு 50 mm dia G.I. பைப் அமைப்பதற்கும், அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 28,000/– க்கும், இச்செலவினம் பொது நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.426.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண் : 5</u>

குளச்சல் நகராட்சியின் தெருவிளக்குப் பிரிவிற்கு மின் பொருட்கள் விநியோகம் செய்ய 28.09.2007–ல் இந்தியன் ஏஜென்சி, நாகர்கோவில் என்ற நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் மேற்படி நிறவனம் சம்மந்தப்பட்ட பொருட்களை விநியோகம் செய்யாமல் வீணாக காலம் தாழ்த்தியதோடு அல்லாமல் பரிசோதனை சான்று வழங்க இயலாது எனவும், தெரிவித்ததாலும் பொதுமக்களுக்கு தெருவிளக்கு வசதிகள் செய்வதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டதால் நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 386 நாள் 17.11.2007–ல் மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவினை ரத்து செய்தது. எனவே 20.12.2007–ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

| :வ.எண். | பொருளின் பெயர் | எண்ணிக்கை | ஜோதிவேல் இண்டஸ்ட்ரீஸ், நாகர்கோவில்.. | கங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி. |
|---|---|---|---|---|
| 1 | 40 W குழல் விளக்கு சோக் | 859 எண்ணம் | 168.00 | 155.00 |
| 2 | 40 W குழல் விளக்கு ஸ்டாட்டர் | 2000 " | 11.00 | 9.50 |
| 3 | குழல் விளக்கு சைடு ஹோல்டர் | 400 " | 10.50 | 9.00 |
| 4 | 250 W சோடியம் ஆவி விளக்கு | 80 " | 760.00 | 745.00 |
| 5 | 250 W சோடியம் இக்னேட்டர் | 75 " | 315.00 | 295.00 |
| 6 | சோடியம் விளக்கு சைடு ஹோல்டர் | 50 " | 135.00 | 120.00 |
| 7 | பி.வி.சி. டேப் ரோல் | 30 " | 11.00 | 10.00 |
| 8 | 400 W மெட்டல் ஹாலிட் பல்ப் | 6 " | 2100.00 | 1980.00 |
| 9 | 400 W மெட்டல் ஹாலிட் சோக் | 6 " | 1910.00 | 1840.00 |

கங்கா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 2,65,295/–
ஜோதி இண்டஸ்ட்ரிஸ் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 2,77,765/–

இதில் கங்கா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம் 1 முதல் 9 வரையிலான பொருட்களுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது. இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ( வ.எண்.1 முதல் 9 வரை) கங்கா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம், திருநெல்வேலி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.427.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் : 6**

குளச்சல் நகராட்சி அலுவலக வளாகத்தினுள் அமைந்துள்ள பொது சுகாதாரப் பிரிவு, தெருவிளக்கு பிரிவு, நில அளவையர் பிரிவு ஆகிய பிரிவுகளில் அமைந்துள்ள கட்டிடமானது சுமார் 25 ஆண்டுகள் பழமையான கட்டிடமாகும். தற்போது அதன் மேற்தளத்தில் பதிக்கப்பட்டுள்ள தரை ஓடுகள் முழுவதும் பழுதடைந்துள்ளதால் கூரையில் நீர்க்கசிவு ஏற்படுகிறது. இதனால் உள்ளே பணியாளர்கள் பணியாற்ற இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் நகர்மன்றத் தலைவர் அறையிலுள்ள கழிப்பிடத்திலும், நகர்மன்றக் கூட்ட அரங்கிலுள்ள கழிப்பிடங்களிலிருந்தும் நீர் வெளியேறாமல் தேங்கி உள்ளது. ஆகவே பொது சகாதாரப் பிரிவு இயங்கும் கட்டிடத்தின் மேல்தளத்தில் உள்ள பழுதடைந்த நீர்த்தொட்டி, தரை ஓடுகள் ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதிதாக அமைப்பதற்கும், கட்டிடத்தை வண்ணம் பூசி மராமத்து பணிகள் செய்வதற்கும், நகர்மன்றத் தலைவர் அறை மற்றும் நகர்மன்ற கூட்ட அரங்கில் உள்ள கழிப்பிடங்களை மராமத்து பணிகள் செய்வதற்கும், ஆணையர் அறைக்கு கழிப்பிட வசதி செய்திடவும் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 1.00 லட்சத்திற்கும், மேற்படி பணியின் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது..

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

**தீர்மானம் எண்.428.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் : 7**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 1–வது வார்டைச் சார்ந்த கல்லத்திவிளை என்னும் பகுதியில் கீழ்க்சண்ட நபர்கள் கீழ்க்கண்ட விபரப்படி தங்களுக்கு சொந்தமான பட்டா நிலத்தில் பாதைக்கான இடத்தினை பொது மக்களின் தேவைக்கு பொது ரோடு போடுவதற்கு வேண்டி நகராட்சி ஆணையர் அவர்கள் பெயரில் தானமாக எழுதிக் கொடுத்துள்ளார்கள்.

1) திரு. சேம் டேனியல்
   பத்திர எண். 2237/2007

**சொத்து விபரம்**

ரீ சர்வே எண். A1-28/14-ல் 0. 10. 40 ஏரில்
18.7 மீட்டர் நீளம் மற்றும் 0.51 மீட்டர் வீதியுள்ள
மனையில் 9. 55092 சதுர மீட்டர் பகுதி

2) திரு. இம்மானுவேல்
   பத்திர எண். 2223/2007

**சொத்து விபரம்**

ரீசர்வே எண். A1 – 28/14
16.40 மீட்டர் நீளம், 0. 55 மீட்டர் வீதியுள்ள
மனையில் 8. 21541 சதுர மீட்டர் பகுதி

3) திருமதி. பகவதி அம்மாள்
   பத்திர எண். 2220/2007

**சொத்து விபரம்**

ரீசர்வே எண். A1 – 28/15
24.60 மீட்டர் நீளம், 0. 50 மீட்டர் வீதியுள்ள
மனையில் 12. 30288 சதுர மீட்டர் பகுதி

4) திரு. நீலகண்டன் நாயர்
   பத்திர எண். 2219/2007

**<u>சொத்து விபரம்</u>**

ரீசர்வே எண். A1 – 22/7

59.70 மீட்டர் நீளம், 1. 7 மீட்டர் வீதியுள்ள மனையில்

மொத்தம் 101.175 சதுர மீட்டர் பகுதி

மேற்படி பட்டா நிலத்தினை நகராட்சியின் சொத்தாக ஏற்றுக் கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.429.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**<u>பொருள் எண் : 8</u>**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட இந்திரா காலனி பகுதியில் தற்போது வெர்மி கம்போஸ்ட் (Vermi Compost) தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த இடத்தினை நகராட்சி நிர்வாக ஆணையரக உர அலுவலர் மற்றும் திடக்கழிவு மேலாண்மை அலுவலர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வறிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.60372/2007/பி4–1 நாள் 31.10.2007–ன் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. அதில் ஆடு, மாடு வதை செய்வதற்கு மேற்படி இடத்தினை பயன்படுத்தவும், நகரையொட்டி அமைந்துள்ள உப்பளம் பகுதியில் உரக்கிடங்கிற்கான இடம் கிடைக்கும் பட்சத்தில் அதனை உரக்கிடங்கு மற்றும் இதர பயன்பாட்டிற்கும் பயன்படுத்திக் கொள்ளவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நவீன ஆடறுக்கும் மனை தொடர்பான பணிகளை இந்திரா காலனி பகுதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.430.** நகர்மன்றத் தீர்மானம் எண். 186 / 20.04.2007–ன்படி 2006–2007–ம் ஆண்டிற்கு 12–வது நிதிக்குழு பரித்துரையின்கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 12,63,442/– திட்ட மதிப்பீட்டில் உரம் தயாரிப்புக்கு டெண்டர் முடிவு செய்யப்பட்டு (19.06.2007) வேலையுத்தரவு வழங்கப்பட்டு வேலையும் முடிவடையும் நிலையில் உள்ளதால், திட்டமிட்டப்படி இப்பகுதியை இயற்கை உரம் தயாரிப்பு பணிக்கு பயன்படுத்திடவும் தீர்மானம் எண். 424 / 31.12.2007 –ன்படி நகராட்சி வாங்க இருக்கின்ற நிலத்தில் நவீன ஆடறுக்கும் மனை அமைத்திடவும், இது சம்மந்தமாக நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பரிந்துரை செய்யவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**<u>பொருள் எண் : 9</u>**

மாநில நிதிக்குழு சமன்பாட்டு நிதி (சுனாமி) சிறப்பு ஒதுக்கீட்டின் கீழ் குளச்சல் தூய மரியன்னை மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்தை குளச்சல் நகராட்சியின் சொத்தாக ஏற்றெடுப்பது தொடர்பாக ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், குருந்தன்கோடு அவர்களிடமிருந்து கடிதம் (எண். அ2/5837/05 நாள் 15.10.2007) வரப்பெற்றுள்ளது. மேற்காண் சமுதாய நலக் கூடத்தினை நகராட்சியின் சொத்தாக எடுத்துக் கொள்வது தொடர்பாக மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மான எண்.431.** ஒத்திவைக்கப்பட்டது.

**<u>பொருள் எண் : 10</u>**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள அனைத்து வார்டுகளிலும் நகர்மன்றத் தலைவர், நகர்மன்றத் துணைத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது தெருவிளக்குகள் புதிதாக தேவைப்படும் இடங்கள், நகர்மன்றத் தலைவரின் அறிவுறுத்தலின்பேரில் தேர்வு செய்யப்பட்டு, பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. அவை கீழ்க்கண்ட மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | தெருவிளக்கு லைன் இருக்கும் மின்கம்பங்களில் புதிதாக குழல் விளக்குகள் அமைத்தல் | : 68 எண்ணம் |
| 2 | தெருவிளக்கு லைன் இல்லாத மின்கம்பங்களில் புதிதாக லைன் இழுத்து குழல் விளக்குகள் அமைத்தல் | : 145 எண்ணம் |
| 3 | புதிதாக மின்கம்பம் அமைத்து குழல் விளக்குகள் அமைத்தல். | : 97 எண்ணம் |

இதன் விபரம் பின்வருமாறு :

I. தெருவிளக்கு லைன் இருக்கும் மின்கம்பங்களில் புதிதாக குழல் விளக்குகள் அமைத்தல்

1) பவுண்டரி ரோடு FI/13, F1/42. F1/61, F1/76, F1/18
2) கோணங்காடு ரோடு F1!/41
3) சாஸ்தாங்கரை FII/16, FII/2, FII/123, FII/87, FI/5
4) தெற்கு கள்ளியடைப்பு F1/2, F1/23, FI/8
5) நடுக்கள்ளியடைப்பு F1/40, FI/28
6) கல்லத்திவிளை FI/31
7) சிங்கன்காவு ரோடு FII/16
8) புதுத்தெரு FII/8, Fii/9, Fii/25, FII/42
9) பண்டாரவிளை FI/40
10) பர்னட்டிவிளை FI/14, FII/8
11) சீம்பிளிவிளை FII/45, FII/47
12) கறுத்தான்விளை FII/16, FII/19
13) மாதனாவிளை FII/31
14) வண்ணாத்திவிளை F1/14, F1/11
15) சீம்பிளிவிளை ரோடு FII/45
16) செட்டியத்தெரு FII/60, F1/22
17) மாதாகாலனி FI/33, FI/46
18) துறைமுகத்தெரு FII/23, FII/13, FII/19, FII/46
19) வெள்ளிப்பிள்ளையார் கோவில் தெரு FII/56
20) கொட்டில்பாடு (புதிய காலனி) FI/11
21) மலிக்காகிணறு சாலை FII/32, FII/19
22) வாய்க்கால் தெரு FII/36, FII/42, FII/27
23) நரிக்கல் FII/13, FII/18
24) உய்யாண்டிவிளை FII/43
25) கணியாக்குடி FI/43, FI/39
26) களிமார் FI/30
27) காமராஜர் சாலை FI/34, FI/7
28) நெசவாளர் தெரு FIII/19
29) பந்தவிளை FII/21, FII/26
30) பள்ளிவிளாகம் FII/43, FII/29, FII/35
31) புல்லன்விளை FI/37, FI/39
32) பூசாரிவிளை FII/65
33) தும்பக்காடு FII/8, FII/2
34) மெயின்ரோடு, FI/1

**மொத்தம் 68 குழல் விளக்குகள்.**

II) தெருவிளக்கு லைன் இல்லாத மின்கம்பங்களில் புதிதாக லைன் இழுத்து குழல் விளக்குகள் அமைத்தல்

1) பவுண்டரி ரோடு FI/78, FII/45
2) தெற்கு கள்ளியடைப்பு FI/14, FI/15, F1/17, FI/18, FI/19, FI/20, FI/13
3) கல்லத்திவிளை FI/28
4) சாஸ்தாங்கரை FI/39, FI/40, FI/41, FI/42, FI/43, FI/44, FI/38, FII/67, FII/68
5) கூத்தாவிளை ரோடு FII/34, FII/35, FII/36, FII/37, FII/38, FII/39, FII/40, FII/41
6) சீம்பிளிவிளை ரோடு FI/51
7) பர்னட்டிவிளை FI/4, FI/5, FI/17
8) மெயின்ரோடு FI/29, FI/20
9) மாதனாவிளை FII/33, FII/34, FII/35
10) அழகுவிளை FI/30, FI/31, FI/32, FI/33, FI/34
11) துறைமுகத்தெரு FII/73, FII/67, FII/74

12) சிங்கன்காவு ரோடு FI/20, FII/39, FII/9
13) புல்லன்விளை FI/53, FI/54, FI/31, FI/32, FI/26, FII/19
14) விவேகானந்தர் சாலை FII/22
15) மாதாகாலனி FI/66, FI/67, FI/69, FI/36, FI/37
16) வெள்ளிப்பிள்ளையார்கோவில் தெரு FI/15, FI/16, FI/18, FI/10, FI/3
17) காரிதாஸ் காலனி FI/9, FI/10
18) குழந்தை யேசு நகர் (சீம்பிளி விளை) 9 எண்ணம்
19) ஆசாத்நகர் காலனி பகுதியில் 2 எண்ணம்
20) மலிக்காகிணறு சாலை FII/33, FII/20, 6/36F
21) களிமார் FI/18
22) வாய்க்கால் தெரு FII/34, FII/35, FII/39, FII/46, FII/47, FII/45, FII/25
23) பீச்ரோடு FII/15
24) நரிக்கல் FII/14, FII/15
25) கணியாக்குடி FI/45, FI/46
26) உய்யாண்டிவிளை FII/83
27) காமராசர் சாலை FI/41, FI/42, FI/24, FI/40
28) நரிக்கல் ரோடு FII/50
29) கிரீன் தெரு FII/17
30) ஈழக்காணிவிளை FII/62
31) முகைதீன்பள்ளி தெரு FII/51, FII/52
32) பந்தவிளை FII/31
33) மரமடி FII/40, FII/9
34) இலப்பவிளை FII/20, FI/12
35) சிங்கன்காவு FII/21, FII/22, FII/23, FII/24, FII/25, FII/26, FII/27, FII/28, FII/29, FII/30, FII/31, FI/27
36) பூக்குழி FI/67
37) வடக்கு கள்ளியடைப்பு FII/25
38) சாஸ்தாங்கரை FII/15
39) நடுக்கள்ளியடைப்பு FI/35, FI/36, FI/39
40) புதுத்தெரு FII/18, FII/20, FII/21, FII/22, FII/23, FII/45, FII/50
41) கறுத்தான் விளை FII/18
42) சாமிவிளை FII/2. FII/3
43) பொட்டல்விளை FI/
44) வெள்ளியாகுளம் C.39
45) காலனி ரோடு FII/59, FII/60, FII/61, FII/62
46) காரிதாஸ் நகர் காலனி ரோடு FII/1, FII/27, FII/28

**மொத்தம் 145 குழல் விளக்குகள்.**

III) புதிதாக மின்கம்பம் அமைத்து குழல் விளக்குகள் அமைத்தல்.

1) பவுண்டரி ரோட்டில் FI/79, FI/80, FI/82, FI/83, FI/84, FI/85 இவைகளின் இடையில் புதிதாக 3 கம்பங்கள் 3 விளக்குகள்.
2) நடுகள்ளியடைப்பு வீ.எண்.1/68.சி அருகிவ் 1 கம்பம் 1 விளக்கு
3) பண்டாரவிளையில் FI/22 லிருந்து வடக்காக 1 கம்பம் 1 விளக்கு
4) பர்னட்டிவிளையில் FI/6 லிருந்து வடகிழக்காக 2 கம்பங்கள் 1 விளக்கு
5) தும்பக்காட்டில் முதல் குறுக்கு சந்தில் 2 கம்பங்கள் 1 விளக்கு
6) துறைமுகத்தெருவில் FII/101 லிருந்து வடக்காக வீ. எண். 13/18 அருகில் 1 கம்பம் 1 விளக்கு
7) துறைமுகத்தெருவில் FII/104 லிருந்து மேற்கு வடக்காக வீ. எண். 13/90 வரை 2 கம்பங்கள் 1 விளக்கு
8) துறைமுகத்தெருவில் வீ.எண். 14/44—ன் அருகில் 1 கம்பம் 1 விளக்கு
9) சாஸ்தான்கரையில் FI/20 லிருந்து கிழக்காக 1 கம்பம் 1 விளக்கு
10) சிங்கன்காவு ரோட்டில் FII/41லிருந்து வடக்காக 1 கம்பம் 1 விளக்கு

11) ஒற்றைக்கண் பாலத்திலிருந்து கியாஸ் குடோன் செல்லும் பகுதியில் 2 கம்பங்கள் 2 விளக்குகள்
12) வண்ணாத்திவிளையில் F1/63 லிருந்து தெற்காக 1 கம்பம் 1 விளக்கு
13) வண்ணாத்திவிளையில் F1/13 லிருந்து வடக்காக 1 கம்பம் 1 விளக்கு
14) தும்பக்காடு, செக்காலத்தெரு, கண்ணன்விளையில் இவைகளின் இணைப்பு பாதையில் 7 கம்பங்கள் 4 விளக்குகள்
15) ஆசாரிமார் தெருவில் FI/57 லிருந்து வடக்காக 1 கம்பம் 1 விளக்கு
16) மாதாகாலனியில் FI/47லிருந்து மேற்காக 1 கம்பம் 1 விளக்கு
17) மாதாகாலனியில் FI/73 மற்றும் FI/74 லிருந்து வடக்காக 2 கம்பங்கள் 2 விளக்குகள்.
18) துறைமுகத்தெருவில் FII/24 லிருந்து மேற்காக 1 கம்பம் 1 விளக்கு
19) துறைமுகத்தெருவில் FI/42 லிருந்து மேற்காக 1 கம்பம் 1 விளக்கு
20) வெள்ளிப்பிள்ளையார்கோவில் ரோட்டில் FI/25 லிருந்து வடக்காக 1 கம்பம் 1 விளக்கு
21) காரிதாஸ்நகர் காலனியில் மண்டபம் வடக்காக புதிதாக 3 கம்பம்ங்கள் 3 விளக்குகள்
22) வாய்க்கால் தெருவில் FII/40 லிருந்து வடக்காக 1 கம்பம் 1 விளக்கு
23) மார்க்கெட் FII/4 -–ன் அருகிலிருந்து கிழக்கு வடக்காக உள்ள பாதையில் 2 கம்பங்கள் 2 விளக்குகள்
24) உய்யாண்டிவிளையில் FII/46 லிருந்து தெற்காக 1 கம்பம் 1 விளக்கு
25) கணியாக்குடியில் FI/40 லிருந்து கிழக்காக 2 கம்பங்கள் 2 விளக்குகள்
26) கணியாக்குடியில் FI/44 க்கும் FII/47–க்கும் இடையில் 1 கம்பம் 1 விளக்கு
27) களிமார் பாலம் அருகில் FI/50 லிருந்து வடக்காக 1 கம்பம் 1 விளக்கு
28) பெரியநாயகி காலனியில் FII/14 லிருந்து கிழக்காக 1 கம்பம் 1 விளக்கு
29) காமராசர் சாலையில் FI/55 லிருந்து கிழக்காக 1 கம்பம் 1 விளக்கு
30) கிரீன் தெருவில் FIII/32 லிருந்து கிழக்காக 1 கம்பம் 1 விளக்கு
31) ஈழக்காணிவிளை FII/62 லிருந்து மேற்காக 4 கம்பங்கள் 3 விளக்குகள்
32) துறைமுகத்தெருவில் வீ.எண்.19/24–ன் அருகில் 1 கம்பம் 1 விளக்கு
33) நிரவுவிளையில் FII/17 –ன் அருகிலிருந்து மேற்கு தெற்காக 6 கம்பங்கள் 4 விளக்குகள்
34) காமராசர் சாலையில் FI/24 லிருந்து மேற்கு தெற்காக 2 கம்பங்கள் 2 விளக்குகள்
35) காமராசர் சாலையில் FI/35 லிருந்து வடக்காக 2 கம்பங்கள் 2 விளக்குகள்
36) காமராசர் சாலையில் FI/17 லிருந்து வடக்கு தெற்காக 2 கம்பங்கள் 2 விளக்குகள்
37) வண்ணாத்திவிளையில் FI/10 லிருந்து தென் மேற்காக 2 கம்பங்கள் 1 விளக்கு
38) துறைமுகத்தெருவில் FII/27 லிருந்து வீ.எண்.11/29 அருகில் 1 கம்பம் 1 விளக்கு
39) துறைமுகத்தெருவில் FII/30 லிருந்து வடக்காக உள்ள பாதையில் 1 கம்பம் 1 விளக்கு
40) மரமடியில் FII/40 லிருந்து வடக்காக 1 கம்பம் 1 விளக்கு
41) துறைமுகத்தெருவில் FII/109 லிருந்து மேற்காக 1 கம்பம் 1 விளக்கு
42) துறைமுகத்தெருவில் FII/107 லிருந்து வீ.எண்.12/74 அருகில் 1 கம்பம் 1 விளக்கு
43) துறைமுகத்தெருவில் FII/69 லிருந்து தெற்காக செல்லும் பாதையில் 2 கம்பங்கள் 2 விளக்குகள்
44) துறைமுகத்தெருவில் FII/98 லிருந்து கிழக்காக வீ.எண்.12/79 அருகில் 1 கம்பம் 1 விளக்கு
45) துறைமுகத்தெருவில் FII/42 லிருந்து வீ.எண்.11/45 அருகில் 1 கம்பம் 1 விளக்கு
46) துறைமுகத்தெருவில் FI/28 லிருந்து வீ.எண்.18/9 அருகில் 1 கம்பம் 1 விளக்கு
47) துறைமுகத்தெருவில் FI/24 லிருந்து வீ.எண்.17/57 அருகில் 1 கம்பம் 1 விளக்கு
48) துறைமுகத்தெருவில் FI/18 லிருந்து வீ.எண்.11/27 அருகில் 1 கம்பம் 1 விளக்கு
49) பறம்புவிளாகத்தில் FII/3 ற்கும் FII/5 ற்கும் இடையில் 1 கம்பம் 1 விளக்கு
50) புதுத்தெருவில் FII25 லிருந்து கிழக்கு வடக்காக 2 கம்பங்கள் 1 விளக்கு
51) சிங்கன்காவுரோட்டில் FI/22 லிருந்து வடக்காக 1 கம்பம் 1 விளக்கு
52) சிங்கன்காவில் FI/27 லிருந்து மேற்காக 2 கம்பங்கள் 2 விளக்குகள்
53) சிங்கன்காவு ரோட்டில் FI/8 லிருந்து கிழக்கு தெற்காக 2 கம்பங்கள் 2 விளக்குகள்
54) கல்லத்திவிளையில் புதிதாக போட்ட மின்கம்பத்திலிருந்து கிழக்காக 1 கம்பம் 1 விளக்கு
55) வலியவிளையில் FI/22 லிருந்து வடக்காக 1 கம்பம் 1 விளக்கு
56) கறுத்தான்விளையில் FII/14 லிருந்து மேற்காக 1 கம்பம் 1 விளக்கு
57) சிங்கன்காவுரோட்டில் FII/8 லிருந்து சாஸ்தாங்கரை வயலோர பகுதியில் 14 கம்பங்கள் 10 விளக்குகள்

58) சீம்பிளிவிளையிலிருந்து புதிய காலனி செல்லும் ரோட்டில் FII/62 லிருந்து மேற்கு தெற்காக செல்லும் சாலையில் 4 கம்பங்கள் 4 விளக்குகள்.

59) துறைமுகத்தெருவில் FII/36 லிருந்து கிழக்காக 1 கம்பம் 1 விளக்கு

60) பள்ளிவிளாகம் சந்திப்பிலிருந்து உய்யாண்டிவிளை செல்லும் சாலையில் வீ.எண்.26/57 லிருந்து மேற்காக 5 மின்கம்பங்கள் அமைத்து அவற்றில் 3 புதிய குழல் விளக்குகள் அமைத்தல்.

61) காமராசர் சாலையில் இருந்து மேற்கு தெற்காக செல்லும் பொது பாதையில் 4 மின்கம்பங்கள் அமைத்து 3 குழல் விளக்குகள் அமைத்தல்.

**மொத்தம் 97 குழல் விளக்குகள்**

மேற்படி மின்கம்பங்கள் நிறுவுவதற்கும், குழல் விளக்குகள் அமைப்பதற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.432**. அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி